	(2020 வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கொடுப்பனவு குறிப்கபுகளட மற்றும் இதனை கணனி உபகரணங்களில் பராமரிப்பு ஒப்பந்தங்களுக்காக இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2021 காலஎல்லைக்காக உரிய தொகை 2020 நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப கொடுப்பனவுகளாக பதிவு செய்யப்படும்.		

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை

2019 நிதிக்கூற்றுக்கள் மீண்டும் வெளியிடுவதற்காக நாளேட்டுக் குறிப்புகள்

JE NO 15	நிலையான வைப்பு வட்டி வருமானக் கணக்கு (DR)	85,655.36	
	நிலையான வைப்பு வட்டி வருமானக் கணக்கு		85,655.36
	(மிகையாக கண்டறியப்பட்ட நிலையான வைப்பு வருமானக் கணக்கு திருத்தியமைக்கப்பட்டு வருவதுடன்		
	2019 நிதிக்கூற்றில் கி.வே. நிலையான வைப்பு வட்டித்தொகை)		
JE NO 16	ஆரம்ப கொடுப்பனவுகள்	21,365.00	
	அலுவலக பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு		21,365.00
	(2020 வருடத்தில் அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு ஒப்பந்தங்களுக்காக கொடுப்பனவுகள் தவறுதலாக 2019 வருடத்தின் செலவுகளாக திவு செய்யப்பட்டிருந்தது. 2020 வருடத்தின் செலவினங்கள் மீண்டம் கணிப்பிடுவதன் மூலம் து திருத்தியமைக்கப்படும்.)		
JE NO 17	திறைசேரி உண்டியல்கள் கணக்கு (Dr)	2,027,925.00	
	திறைசேரி உண்டியல்கள் வட்டிக் கணக்கு		2,027,925.00
	(2019 கணக்குகளில் நிறைவேற்றப்பட்ட J/E இலக்கம் 23 தவறானதால் அந்த பிழைக் காரணமாக கிடைத்த வட்டி வருமானம் மற்றும் திறைசேரி உண்டியல்கள் நிலுவை 2,027,925 ஐ குறைந்த பெறுமதியால் காட்டப்பட்டுள்ளது.இந்த நாளேட்டு குறிப்பு நிறைவேற்றுவதன் மூலம் அது சீராக்கப்படும்.		
JE NO 18	திறைசேரி உண்டியல்கள் கணக்கு (Dr)	35,984.04	
	நிதியக் கணக்கு - 2019 வருடத்தின் மிகை செலவினம்		35,984.04
	(2019 கணக்குகளில் நிறைவேற்றப்பட்ட சரியான J/E இலக்கம் 22 சீராக்கம் செய்யப்பட்ட தொகை 3,915,381 ஆகும். பிழையான தொகை காரணமாக திறைசேரி விலைப்பட்டியல் ரூபா 36,000 குறைவாக பிரகடனப்படுத்தியிருப்பதுடன் நாளேட்டு குறிப்பு நிறைவேற்றுவதன் மூலம் அது சீராக்கம் செய்யப்படும்.)		
JE NO 19	காப்புறுதிக் கம்பனிகளின் பங்களிப்பு (DR)	6.00	
	காப்புறுதிக் கம்பனிகள் மூலம் கி. வேண்டியவைகள்		6.00
	(2019.12.31 திகதியிற்கு கி.வே. காப்புறுதி வருமானம் கிட்டத்தட்ட 6 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் நாளேட்டு குறிப்பு நிறைவேற்றுவதன் மூலம் அது சீராக்கம் செய்யப்படும்.)		

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை
2020 திசெம்பர் 31 பரீட்சார்த்த சமன்பாடு. (நாளேட்டுக் குறிப்புகள் அங்கீகரிப்பதற்கு முன்னர்)

	பற்று	பற்று
சொத்துக்கள்	713,500.00	
நிழற்படபிரதி , அச்சீட்டு இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள்	140,700.00	
வீட்டு தளபாடங்கள் மற்றும் கருவிகள்	641,500.00	
குளிரூட்டிகள்	139,800.00	
DVD ப்ளேயர்	1,554,862.50	
ஏனைய சொத்துக்கள்	62,207.50	
கெமராக்கள்	-	
சாரதி கற்றல் இயந்திரங்கள்	5,875,351.00	
குளிர்சாதனப் பெட்டிகள்	133,000.00	
ஒருமித்த தேய்மானம்		
கணனி		328,786.50
நிழற்படபிரதி , அச்சீட்டு இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள்		32,976.56
வீட்டு தளபாடங்கள் மற்றும் கருவிகள்		230,940.00
குளிரூட்டிகள்		32,765.63
DVD ப்ளேயர்		258,236.71
ஏனைய சொத்துக்கள்		20,292.81
கெமராக்கள்		
சாரதி கற்றல் இயந்திரங்கள்		619,728.80
குளிர்சாதனப் பெட்டிகள்		9,656.16
நிலையான சொத்துக்கள்	135,606,733.27	
திறைசேரி உண்டியல்கள்	250,234,059.36	
காப்புறுதிக் கம்பெனிகளிடமிருந்து கி.வே	3,661,311.68	
நிதியக் கணக்கு		419,555,824.89
காப்புறுதிக் கம்பனிகளின் பங்களிப்புத்தொகை		43,642,940.75
நிலையான வைப்பு வட்டிக்கணக்கு		949,800.54
நிலையான வைப்புகளின் வட்டி கி.வே. கணக்கு	1,884,353.38	
திறைசேரி உண்டியல் வட்டி கணக்கு		-
திறைசேரி உண்டியல் வட்டி கி.வே. கணக்கு	1,938,329.90	
செ.வே. கணகாய்வுக் கட்டணம்		375,000.00
வாகனங்களுக்கான எரிபொருள்	87,500.00	
சபையின் உசாக்கையர் செலவு	1,924,735.88	
சபையின் அங்கத்தவர் கட்டணம்	201,500.00	
நஷ்டஈடு	4,275,000.00	
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு	319,122.44	
வாகன பராமரிப்பு	13,717.01	
தேய்மானம்		
எழுதுபொருள் செலவினங்கள்	159,280.00	
தொலைபேசி செலவினங்கள்	171,069.72	
பத்திரிகைகள்	83,790.00	
அச்சீடு மற்றும் மொழிபெர்ப்பு கட்டணங்கள்	59,437.50	
மேலதிக வேலைநேர அறவீடுகள்	124,779.88	
விளம்பரம் மற்றும் பிரபல்யப்படுத்துதல்	-	
கூட்டங்களுக்காக குறகிய உணவு வகைகள்	78,607.67	
பயண்ச் செலவுகள்	31,535.00	
நானாவித செலவினங்கள்	62,588.69	
வங்கி நிலுவை	55,221,484.39	
வாசஸ்தலங்கள்	-	
தபால் கட்டணங்கள்	3,720.00	
பதவியணி பயிற்சிகள்	-	
கருத்திட்டங்கள் (தொழில்முயற்சி இலங்கை)	-	
வருமான வரி	-	
கணகாய்வுக் கட்டணம்	-	
தற்போதுள்ள நிறுத்தீடு வரி மற்றும் ஏனையவைகள்		-
சுத்திகரிப்புக் கட்டணங்கள்	653,372.58	
செ.வே. குறைப்பனவுகள்	-	
	466,056,949.35	**466,056,949.35**

கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கை 2020

தலைவர்
வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

.....

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பகுதியின் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2020 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) மீளாய்வு வருடத்தின் இறுதித் திகதியிற்கு நடைமுறை அல்லா சொத்துக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 1,124,276 குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலக்கம் 1368/18 மற்றும் 2004 நொவெம்பர் 24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி பிரகாரம் சபைக்கு காப்புறுதி நிறுவனங்களின் மூலம் அனுப்பியிருந்த ரூபா 43,768,526 ஆன நூற்றுக்கு 01 இல் மூன்றாம் தரப்பு ரீதியான காப்புறுதி பங்களிப்பு தொடர்பாக துல்லியம் உறுதிபடுத்தப்படுகின்ற காப்புறுதி நிறுவனங்களில் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 சபையின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையில் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ள சபையின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆயினும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது குறித்து எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என கருதப்படுகின்றன. ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது எனது அபிப்ராயத்தால் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன் நான் இது குறித்து எந்தவிதமான முறைக்கும் உறுதிப்பாடு அல்லது அபிப்பிராயத்தினை வெளிப்படுத்த மாட்டேன்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்குடன் தொடர்புடைய, எனது பொறுப்பாக அமைவது மேற்குறிப்பிட்ட அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியுமான பட்சத்தில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போதும் ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதமாக பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவுக்கமைய பொருள்பட பொருத்தமானதா என்பது குறித்து கருதுவதாகும்.

சபையின் 2020 வருடாந்த அறிக்கையினை வாசிக்கும்போது, அந்த அறிக்கையில் போதியளவான பிழைகள் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் முடிவு செய்யும் பட்சத்தில் , திருத்தம் செய்வதற்காக ஆளுகைத் தரப்பினர்களுக்கு அந்த காரணங்கள் தெரிவிக்கப்பட வேண்டும். மேலும் திருத்தப்படாத பிழைகள் இருப்பின், அவை அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில்,நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவனத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பரிசோதிக்கும் பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

1.5 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலொன்றாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும்போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் செயல்படுத்தப்பட்டது. மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லையெனினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொளளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமைப்பாடு பற்றி பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு முடிவுகள், முக்கிய உள்ளக ஆளுகை பலவீனங்கள் மற்றும் ஏனைய காரணங்கள் தொடர்பாக ஆளும் தரப்பினரை விழிப்பூட்டுகின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் சபையினால் பேணப்பட்டிருப்பதாகவும்.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் கீழே காட்டப்பட்ட குறிப்பிடுவதற்கு கூட வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் நிறுவகத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்பட்டுள்ளதாக

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம் அல்லது சபையின் ஆளுகை சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ள முறையில் செயல்பட்டு இருப்பதாகவும்.

சட்டங்கள்,விதிகள /பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	விபரங்கள்
(அ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை (i) நிதிப் பிரமாணக் கோவை110	இழப்பீடு தொடர்பான பதிவேடு பராமரிக்கப்படாதிருந்தது.
(ii) நிதிப் பிரமாணம் 891(I)	சொத்துக்கள் தொடர்பில் செயலாற்றும் அலுவலர்களால் பிணை வைக்கவேண்டிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளிட்ட பிணை தொடர்பான ஆவணமொன்று பேணப்படாதிருந்தது.
	நிறுவனத்துக்குச் சொந்தமான நிலையான சொத்துக்களை பதிவு செய்வதற்காக நிலையான சொத்து ஆவணமொன்றினை பேணவேண்டியிருப்பினும், அதற்கமைய செயல்படாதிருந்தது.
(ஆ)1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2)11 ஆம் பின்னிணைப்பு	நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் சபையினால் வரவு, செலவுத் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டியபோதும், மீளாய்வாண்டினது வரவு செலவு மதிப்பீட்டிற்கான அங்கீகாரம் 2020 பெப்ருவரி 28 ஆந் திகதி பெற்றிருந்தது.
(இ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் இலக்கம் பிஈடீ.்.12 மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவு	
(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ.்.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் **(i) 4.2.2 பந்தி**	நிர்வாகச் சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப்பட வேண்டியிருப்பினும், மீளாய்வு வருடத்துக்குரிய 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் நடாத்தப்பட்ட கூட்டங்களுக்காக அனைத்து உறுப்பினப்பினர்களினதும் பிரதிநிதித்துவம் இடம்பெறாதிருந்தது.
(ii) 8.8 பந்தி	நிதி அதிகாரக் கையளிப்பு வருட ஆரம்பத்தில் சபையின் மூலம் அங்கீகரித்துக் கொள்ள வேண்டியிருப்பினும், 2020 பெப்ருவரி மாதம் 28 ஆந் திகதி நடைப்பெற்ற சபைக் கூட்டத்தின்போது அது அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு முரணாக செயலாற்றியிருப்பது குறித்து

(அ) 1998 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மோட்டார் வாகன சட்டத்தின் திருத்தச்சட்டத்தின் (203 ஆம் அதிகாரம்) வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய ஆணைக்குழு நிறுவுவதனை நோக்கமாகக் கொண்டு தேசிய சபை நிறுவப்பட்டு 15 வருடங்கள் கடந்திருப்பினும் ஆணைக்குழுவாக நிறுவப்படாமைக்கு காரணமாக இந்த சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு சட்டரீதியான அதிகாரங்கள் கிடைக்காமல் இருந்ததுடன் முறைசார் பதவியணி நியமித்துக்கொள்வதற்கு தடங்களாக இருந்தது.

(ஆ) 1387/4 -2005 ஏப்ரல் 04 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளிலிருந்து மோட்டார் வாகனங்களின் அளவு மற்றும் அவற்றின் சிறப்பியல்ப்புகள் மற்றும் இணைப்பாக்கம், வீதி விபத்துக்கள் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளிவிபரங்கள் உள்ளடங்கிய கணனி தரவுக் களஞ்சிசாலையொன்றினை கொண்டு நடாத்துதல், வீதிப் பாதுகாப்பு விடயம் குறித்து நூலகசாலையொன்றினைக் கொண்டு நடாத்துதல், தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளுக்கு உதவுதல்,இணை சர்வதேச தாபனங்களுடன் உறவுகளை பேணுதல் அறிவு பரிமாற்றிக்கொள்ளல், வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய கருத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்முறைப்படுத்துதல், அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்குள் வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் வீதிபாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கு மதியுரைகளை வழங்குதல் முதலிய நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மீளாய்வு வருடமாகும்போதும் செயலாற்றப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் மற்றும் பயனுறுதிவாய்ந்த காலஎல்லைக்குள் உரிய சட்டவிதிகளுக்கு இணங்க கொள்முதல் செய்து பயன்படுத்தாதிருந்தமைக் குறித்து

03. ஏனைய காரணங்கள்

(அ) அடையாளம் தெரியாத மோட்டார் வாகனங்கள் மூலம் காயமடைந்த நபர்களுக்கான இழப்பீடு செலுத்தும் முன்மொழிவு திட்டத்தின் அறிவுறுத்தல் தாளின் படி இழப்பீடு தொடர்பில் சமர்பித்திருந்த விண்ணப்பதாரர்களுக்கு தாமதமின்றி இழப்பீடு வழங்க வேண்டியிருப்பினும், வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்கு 2018 வருடத்திலிருந்து 2019 திசெம்பர் வரையிலான காலத்துக்குள் கிடைத்திருந்த இழப்பீடுகள் 06 விண்ணப்பங்கள் சமர்பித்திருந்த நாள் தொடக்கம் 01 முதல் 02 வருடங்களும் 06 மாதங்கள் கடந்திருப்பினும் கணக்காய்வு திகதியாகும்போது அந்த நட்டஈடு செலுத்துவதற்கு சபை செயலாற்றவில்லை.

(ஆ) 2018 மற்றும் 2019 வருடங்களில் அடையாளங் தெரியாத வாகனங்களின் மூலம் ஏற்பட்டிருந்த 02 உயிரிழப்புகளுக்காக கிடைத்திருந்த விண்ணப்பங்களுக்காகத் தேவையான நடவடிக்கையெடுப்பதற்கு தாமதமாகியதால் 01 வருடமும் 07 மாதங்கள் மற்றும் 02 வருடங்கள் மற்றும் 06 மாதங்கள் தாமதத்துடன் ரூபா 400,000 ஆன இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் 2015,2017 மற்றும் 2019 வருடங்களின்போது காயமடைந்த நபர்கள் தொடர்பில் கிடைத்திருந்த 08 விண்ணப்பங்களுக்காக ரூபா 775,000 ஆன நஷடஈட்டுத்தொகை மீளாய்வு வருடத்தில் செலுத்தப்பட்டிருப்பினும், விண்ணப்பங்கள் கிடைத்து 01 வருடமும் 02 மாதங்கள் மற்றும் 05 வருட காலஇடைவெளி தாமதத்தின் பின்னர் இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வு வருடத்தில் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து ரூபா 43,768,526 பங்களிப்பு நிதி கிடைத்திருப்பினும், அதில் இழப்பீடாக ரூபா 4,275,00 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.அத்தொகை கிடைத்த பங்களிப்புத்தொகையிலிருந்து நூற்று 10 சதவீதமாகும். இலங்கைக்குள் ஏற்படுகின்ற வாகன விபத்துகள் தொடர்பில் கருதும்போது இழப்பீட்டுத் தொகை பெற்றுக் கொள்வது குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லாமையே இந்த நிலைமைக்கு பிரதான காரணமாக அமைந்திருப்பதை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஈ) வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை வலுப்படுத்துவதற்காக போதியளவு பயிற்சி பெற்ற பதவியணி மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருப்பினும்,போக்குவரத்து அமைச்சின் கீழ் செயல்படுகின்ற நிறுவனமாக செயல்படுவதுடன் இந்த சபை போக்குவரத்து அமைச்சு, இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு இணைக்கப்பட்ட 11 அலுவலர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் அலுவலர் மற்றும் அமய தொழிலாளர் கொண்டுள்ளது.

(உ) 2018 திசெம்பர் மாதம் ஜப்பான் நன்கொடையாக கிடைத்திருந்த மற்றும் கொள்வனவு செய்திருந்த ரூபா 5,875,351 பெறுமதியான சாரதி பயிற்சி உபகரணங்களிலிருந்து சாரதி பயிற்சியளிப்புகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2019 ஜூன் 21 ஆந் திகதியின் பின்னர் 2021 மார்ச் வரையிலான பயிற்சியளிப்பு நடவடிக்கைகள் நிறுத்திவைத்ததன் காரணமாக அந்த உபகரணங்கள் செயல்படாமல் இருந்தன.

(ஊ) 2014 பெப்ருவரி 17ஆம் திகதி அரசாங்க நிதி சுற்றுநிறுபம் இலக்கம் 01/ 2014 (4)(ஈ) பிரிவின் பிரகாரம் வருடாந்த செயல்முறைத் திட்டமொன்றுடன் வருடாந்த பெறுகைத் திட்டமொன்றினைத் தயாரித்து செயல்படுத்த வேண்டியிருப்பினும், மீளாய்வு வருடத்துக்குரிய பண்டங்கள், சேவைகள் மற்றும் பல்வேறு கருத்திட்டங்கள் நிறைவேற்றுவது குறித்து ரூபா. 49.28 மில்லியனுக்கு சபையின் மூலம் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பினும் மீளாய்வு வருடத்துக்குள் சபையின் நோக்கங்களுக்குரிய எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாததனால் பெறுகைத் திட்டத்தில் எந்தவித நடவடிக்கையும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியாகும்போதும் நிறைவேற்றப்படாமல் இருந்தது.

(எ) 2020 வருடத்திற்கான செயல்முறை திட்டத்தின் வீதி பாதுகாப்பு முகாமைத்துவக் கொள்ளளவை மேம்படுத்துவதற்கான 20 கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதனை நிறைவேற்றும் பொருட்டு 49 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் 14 நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், அந்த நிகழ்ச்சித்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்தது.

(ஏ) வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிற்கமைய சபையின் மூலம் உழைக்க வேண்டிய வருமானம் ரூபாய் 70 மில்லியனாக இருந்ததுடன், சபையின் மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபாய் 13.79 மில்லியனும், மூலதன செலவினங்களுக்காக ரூபாய் 63.2 மில்லியன்களும் ஆக ரூபா 77 மில்லியன்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. சபை ரூபா 71 மில்லியன்கள் ஆன வருமானம் உழைத்திருப்பினும் சபையின் நடவடிக்கைகளுக்கான தேய்வு ரூபா 1.3 மில்லியன் உட்பட ரூபா 9.5 மில்லியன் மீண்டெழுஞ் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதி பயன்படுத்துவது குறைந்த மட்டத்தில் காணப்பட்டது,

டப்ளியு.பி.சி.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2.2.2

சட்டங்கள், விதிகள் / பிரமாணங்கள்

என்பவற்றுடனான தொடர்பு

(அ) நிதி பிரமாணங்கள் i

இழப்பீடு தொடர்பாக ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.
Ii இது வரை பிணை வைத்தல் தேசிய சபை அதிகாரிகளால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அமைச்சினால் ஆலோசனையினைப் பெற்று பிணை வைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் இதனுடன் தொடர்புடைய ஆவணம் பராமரிக்கப்படும் என்றும் குறிப்பிடுகிறேன்.

(ஆ) சுற்றறிக்கை இலக்கம் 842 மற்றும் நிதிப் பிரமாணம் 502

நிலையான சொத்து பதிவேடு தயார்செய்யப்பட்டுள்ளது.

(இ)1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் இலக்கம் மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவு

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தற்போதைய தலைவராக நான் 2020.02.06 ஆம் திகதியன்று பதவியேற்றேன். தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற முதல் சபைக் கூட்டத்தில் மீளாய்வு வருடத்துக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

(ஈ)இலக்க /12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையில்

(I) 4.2.2 பந்தி

தற்போதைய கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக மீளாய்வு வருடத்துக்குரிய நிர்வாக சபைக் கூட்டங்களை நடத்த முடியவில்லையென்பதுடன் நடாத்தப்பட்ட கூட்டங்களுக்காக அனைத்து உறுப்பினர்களையும் பங்கேற்க வைப்பதற்கு முடியவில்லை. இருப்பினும், கூட்டங்களில் கலந்துகொள்வது குறித்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உட்பட்டுள்ளதால், எதிர்வரும் காலங்களில் நடைப்பெறவிருக்கும் கூட்டங்களுக்காக அனைத்து உறுப்பினர்களும் கட்டாயமாக பங்கேற்க வேண்டுமென்பது தொடர்பில் விழிப்பூட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(II) 8.8 பந்தி

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தற்போதைய தலைவராக நான் 2020.02.06 ஆம் திகதியன்று பதவியேற்று தலைவர் பதவியினை வகித்ததன் பின்னர் நடைபெற்ற முதல் சபைக் கூட்டத்தில் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான அதிகாரங்களை கையளிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(எ)

(அ) வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை, தேசிய போக்குவரத்து பாதுகாப்பு தொடர்பான ஆணைக்குழுவாக நியமனம் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்டாலும் அங்கீகாரம் கிடைக்கப்படவில்லையென்பதுடன் 2021.05.04 ஆம் திகதி பல பரிந்துரைகளுக்கு உட்பட்டு அதற்காக அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. அவ்வாறு வழங்கப்பட்ட பரிந்துரைகளின்படி ஆரம்பத்தில் இருந்த சட்ட வரையுள் அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தில் 2021.06.15 ஆம் திகதி திருத்தப்பட்டதுடன், அவ்வாறு திருத்தப்பட்ட சட்ட வரையுள் அமைச்சின் சட்டப் பிரிவினால் சட்ட வரைஞருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ)இலக்கம் 1387/4 மற்றும் 2005 ஏப்ரல் 04 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியின் மூலம் கையளிக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணைக்குட்படுத்தப்பட்ட காரணிகள்

1. மோட்டார் வாகன அளவு, அவற்றின் தன்மைகள் மற்றும் இணைப்பாக்கம், வீதி விபத்துக்கள் மற்றும் வீதி பாதுகாப்பு குறித்து உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளி விவரத் தகவல்களைக் கொண்ட கணனி மயமாக்கப்பட்ட தரவுத்தளத்தை பராமரித்தல்

மோட்டார் வாகன அளவு, அவற்றின் தன்மைகள் மற்றும் இணைப்பாக்கம் பற்றிய தகவல்கள் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்திடமிருந்து பெற்று வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் தயாரிக்கப்பட்ட மின் நூலகம் மூலம் அந்த தகவலுடன் தொடர்புகொள்வதற்கு முடியுமான வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
இலங்கை பொலிஸ், உலக சுகாதார அமைப்பு மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து தற்போது மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் பராமரிக்கப்படுகின்ற இலங்கை விபத்து தரவு முகாமைத்துவ முறைமை, நாடு முழுவதும் உள்ளடக்கும் வகையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான முன்மொழிவைத் தயாரித்து அமைச்சின் செயலாளரினால் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டிருப்பதுடன் அதை செயல்படுத்துவதற்காக 2021.08.16 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்தது. இதன்படி, இலங்கை விபத்து தரவு முகாமைத்துவ முறைமை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.வீதி பாதுகாப்பு விடயம் தொர்பாக நூலகத்தை பராமரித்தல்

வீதி பாதுகாப்பு என்ற விடயம் தொடர்பாக நிறுவுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள நூலகம் மின்நூலகமாக நிறுவுவது தொடர்பான செயல்பாடுகள் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளது.

3. தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிக்கு உதவுதல்

வீதி விபத்துகளை குறைப்பதனை நோக்காகக் கொண்டு 03 ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அதன் முதல் ஆராய்ச்சியாக மோட்டார் சைக்கிள் விபத்துகளை குறைப்பதற்காக ஆராய்ச்சிக்கான பெறுகை பணி நடந்து வருகிறது. அதன் இரண்டாவது ஆராய்ச்சியாக வாகன விபத்துகள் அதிகமாக இடம்பெறுகின்ற மற்றும் பாதசாரிகளின் இறப்புகளைக் குறைப்பது தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக தேசிய சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

4.இணை சர்வதேச நிறுவனங்களுடன் உறவுகளைப் பேணுதல், அறிவைப் பரிமாறிக் கொள்ளுதல்

ஐக்கிய நாடுகள் சபையால் பெயரிடப்பட்ட 2011-2020 வீதி பாதுகாப்பு தசாப்தம் மீளாய்வுக்குட்படுத்தி 2030 ஆண்டாகும்போது வீதி விபத்துகளை 50% ஆல் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகளை அடையாளம் காண்பதற்காக உலக சுகாதார அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி அலுவலகத்தின் பிரதிநிதியொருவர் மற்றும் தேசிய சபையின் பிரதிநிதிகள் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருப்பதுடன் அதன் எதிர்வரும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

5.வீதி பாதுகாப்பு தொடர்பாக கருத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல்

ஆண்டு செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதி பாதுகாப்பு குறித்த திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

6. அரசு மற்றும் அரசு சாரா அமைப்புக்குள் வீதி பாதுகாப்பு தொடர்பான பணிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

வீதி பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கை குறித்து ஆலோசனை வழங்குவதற்காக ˙சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இணைந்து தயாரிக்கப்பட்ட 2021-2026 ஆண்டுகளுக்கான வீதி விபத்துகளை குறைப்பதற்கான செயல் திட்டம் தற்போது அச்சிடப்பட்டு வருகின்றது.
மேலும், அரசு கணக்குக் குழுவின் உத்தரவுக்கமைய வீதி பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக ஒருங்கிணைப்புக் குழு நியமனம் தொடர்பாக தற்போது அமைச்சின் மூலம் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அந்தக் குழு அளித்த பரிந்துரைகள் அரசிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவு

தற்போது நிலவும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக, வருடத்தின் கொள்வனவு நடவடிக்கைகள் எதிர்பார்த்த வகையில் மேற்கொள்ள முடியாத நிலையேற்பட்டதுடன் தற்போது சபையின் வளங்களை வினைத்திறனுடனும் விளைவுபெருக்கத்துனுடனும் கொள்முதல் செய்து பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

03. ஏனைய காரணங்கள்

(அ) வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்கு 2018 ஆண்டில் பெறப்பட்ட அனைத்து இழப்பீட்டு விண்ணப்பங்களுக்கும் இதுவரை, நிதி நிவாரணம் வழங்கி முடிக்கப்பட்டுள்ளது.2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து ஒரு விண்ணப்பம் 2021.08.09 ஆம் திகதி நடைபெற்ற தேசிய சபைக் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டதுடன் ஒரு விண்ணப்பம் தொடர்பில் அங்கீகாரம் கிடைத்தது. மேலும் ஒரு விண்ணப்பம் நிலைக்குழு கூட்டத்திற்கு அனுப்பப்பட உள்ளது.

(ஆ) வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் செயல்படுத்தப்படுகின்ற அடையாளம் தெரியாத வாகனங்களால் ஏற்படும் விபத்துகளுக்காக நிதி நிவாரணம் பெறுவதற்கான அனைத்து கோரிக்கைகளும் மோட்டார் வாகன பொலிஸ் தலைமையகத்தால் நடத்தப்படும் விசாரணை செயல்முறையொன்றினால் மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் நிறுவப்பட்டுள்ள மூவர் கொண்ட நிலையியற் குழுவின் மூலம் வழங்கப்படுகின்ற அவதானிப்புகளுக்குப் பின்னர் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக் கூட்டத்தில் சமர்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொண்டதன் பின்னர் நிதி நிவாரணம் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட செயன்முறைக்காக குறிப்பிட்ட சில காலம் தேவைப்படுவதுடன், வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற சில கோரிக்கைகள் குறித்து தேவையான தகவல்கள் சில விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களில், மறு அறிவிப்புக்குப் பின்னர் அந்த தகவல்கள் கொண்டு வருவதற்கு நேரிடும். இருப்பினும், அத்தகைய குறைபாடுள்ள கோரிக்கைகள் தொடர்பான தகவல்களை கொண்டு வருவதற்காக சில சமயங்களில் சில நினைவூட்டல்கள் கூட அனுப்ப வேண்டியேற்படுகின்றது.
நிதி நிவாரணம் வழங்கும் நடவடிக்கையில், கோரிக்கைகளை சமர்ப்பிப்பதில் இருந்து நிதி நிவாரணம் வழங்கும் வரை ஏற்படும் சிற்சில தாமதங்களைக் குறைப்பதற்கான முயற்சிகள் இற்றையாகும்போது மேற்கொள்ளப்பட்டு வருவதை தெரிவிக்கப்படுவதுடன், காலதாமதமின்றி நிதி நிவாரணம் வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விடயம் குறித்து 2021.08.06 ஆம் திகதி நடைப்பெற்ற தேசிய சபைக் கூட்டத்தில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டதுடன் அங்கு வாகன விபத்து ஏற்பட்டு 6 மாதங்கள் ஆகியும் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை அடையாளம் காணப்படாவிட்டால் இழப்பீடு வழங்க முடிவு செய்து இழப்பீடு செலுத்திய பின்னர் விபத்து குறித்து விசாரணை இருப்பின் பாதிக்கப்பட்டவருக்கு வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டிருப்பதை மற்றும் செலுத்தப்பட்ட தொகையை கௌரவ நீதிமன்றத்திற்கு தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட மோட்டார் வாகனப் பொலிஸாருக்குத் தெரிவிக்குமாறும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(இ) மோதிவிட்டு தப்பிஓடிய விபத்துகள் தொடர்பாக சமூகத்தை விழிப்பூட்டுவதற்காக அனைத்து பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் விழிப்புணர்வூட்டும் துண்டு பிரசுரங்கள் மற்றும் எக்ஸ்- பலகைகளை தயார் செய்து அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் உள்ளடக்கக்கூடிய வகையில் விழிப்புணர்வூட்டும் துண்டு பிரசுரங்கள் மற்றும் எக்ஸ்-பலகைகளை அந்த இடங்களில் பொருத்துவது தொடர்பான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், பிரபல தொலைக்காட்சி ஊடகங்களூடாக, Easy TV பிரச்சாரம் முறையினூடாக இழப்பீட்டு வழங்கும் முறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.அதற்கமைய தற்போது இழப்பீட்டு விண்ணப்பங்கள் நிறுவனத்துக்கு கிடைப்பதில் தெளிவான முற்போக்கான வளர்ச்சி காணப்படுகின்றது.

(ஈ)தற்போது போக்குவரத்து அமைச்சின் மூலம் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூவர், பயிலுனர் பட்டதாரி (பயிற்சி) நான்கு பேர், முகாமைத்துவ சேவை அலுவலர் ஒருவர், அலுவலக உதவியாளர், சாரதியொருவர், இலங்கை போக்குவரத்துச் சபையின் மூலம் இணைக்கப்பட்டுள்ள ஓர் எழுதுவினைஞர், புகையிரத திணைக்களத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப உதவியாளர்கள் இருவர், அலுவலக உதவியாளர் ஒருவர் மற்றும் புகையிரத உதவியாளரால் கடமைகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஒரு பதவியணியை அங்கீகரித்துக் கொள்வது தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் மர்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பான அறிக்கையினை தயாரிக்கப்பட்டு வருகிறது

(உ) 2021.03.31 ஆம் திகதி நடைப்பெற்ற தேசிய சபைக் கூட்டத்தின்போது அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்று உரிய உபகரணங்கள் மிகவும் பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமான நிறுவனமொன்றுக்கு வழங்குவது பொருத்தமானதென்பது சபை உறுப்பினர்களின் முடிவாக இருந்தது. இந்த நிலைமையை அமைச்சின் செயலாளருக்கு தெளிவுபடுத்தி அதற்கமைய மேலதிக செயலாளர் (நிர்வாகம்) மற்றும் மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்) மூலம் உரிய உபகரணங்களுடன் இடம் கண்காணிக்கப்பட்டது. அங்கு அந்த வளாகம் இராஜாங்க அமைச்சிலிருந்து மீண்டும் பிரிக்கப்பட்டு, செயல்பாட்டிற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டாலும் இராஜாங்க அமைச்சினால் அதனைப் பெற்றுக்கொள்வதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதன்படி, உரிய உபகரணங்கள் வேறு இடங்களில் நிறுவுதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளது.

(ஊ) 2020 வருடத்தின் பெறுகைத் திட்டம் 2020.02.08 திகதி வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டதுடன் 2020.03.11 திகதி அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துக்காக சமர்பிக்கப்பட்டது. அதற்காக 2020.06.11 திகதி அங்கீகாரம் கிடைத்ததுடன் 2021.06.02 திகதி விலைக்கேள்விகளைத் திறந்து வைக்கும் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்காக அங்கீகாரம் கிடைத்தது. வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்காக பெறுகைக் குழு நிறுவியது தொடர்பாக 2020.09.03 திகதி தேசிய பெறுகைக் குழுவிற்கு கடிதமொன்றினை அனுப்பியதன் பின்னர் 2020.09.10 திகதி அது அங்கீகரிக்கப்பட்டது. 2020.10.05 பெறுகைக் குழு நியமனம் தொடர்பான கடிதம் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் 2020.10.13 திகதி அது அங்கீகரிக்கப்பட்டது. அதேபோன்று கொரோனா நிலைமைக் காரணமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டது. இந்நிலைமையினால் எதிர்பார்த்தவாறு பெறுகை நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்படாத நிலையில் தற்போது அது தொடர்பான நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(எ) கொரோனா தொற்று நோய் நிலைமைக் காரணமாக அந்தந்த வேலைத்திட்டங்கள் எதிர்பார்த்தபடி கொண்டு நடாத்துவதில் தவறினாலும் தற்போது அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறன. அந்த ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டங்களினதும் தற்போதைய நிலைமைக் குறித்து கணக்காய்வுககு பதில் வழங்கப்பட்டுள்ளது.

(ஏ) கொரோனா தொற்று நோய் நிலைமைக் காரணமாக வரவுசெலவுத்திட்ட மூலதனம் மற்றும் மீண்டெழுஞ் செலவினங்கள் எதிர்பார்த்த அளவுக்கு செலவு செய்ய முடியவில்லையென்படுதுடன் நிதி ஈடுபடுத்துவது மிகக்குறைவான அளவில் இருந்தது. எதிர்வரும் காலங்களில் நிதி வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிற்கமைய அனுப்புவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை தெரிவிக்கிறேன்.

ஆர்.எல் அன்டன் டி மென்ஸ்,
தலைவர்
வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை